## மார்ச் – 16 – சனி

**“உங்களிடம் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைமாறு கிடைக்கும்.” மத் 5:46**

### முதல் வாசகம் : இணைச்சட்டம் : 26 : 16 - 19

மோசே மக்களை நோக்கிக் கூறியதாவது : இந்த முறைமைகளையும், நியமங்களையும் நீ நிறைவேற்றுமாறு உன் கடவுளாகிய ஆண்டவர் இன்று உனக்குக் கட்டளையிட்டுள்ளார். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அவற்றை நிறைவேற்றுவதில் கருத்தாயிரு.ஆண்டவரை உன் கடவுளாய் ஏற்பதாகவும் உனக்குக் கடவுளாக இருப்பார் என்றும், அவருடைய வழிகளில் நடப்பதாகவும், அவருடைய நியமங்களையும், கட்டளைகளையும் முறைமைகளையும் கடைப்பிடிப்பதாகவும், அவர் குரலுக்குச் செவி கொடுப்பதாகவும் இன்று நீ அவருக்கு வாக்களித்துள்ளாய்.நீ அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால், அவர் கூறியபடியே நீ அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்பாய் என்றும்,அவர் உருவாக்கிய எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும் உன்னையே உயர்த்துவார் என்றும், அதனால் உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினமாய் நீ இருப்பாய் என்றும் ஆண்டவர் இன்று உனக்கு வாக்களித்துள்ளார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.

### நற்செய்தி : மத்தேயு 5 : 43 – 48

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : ”உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக ”, ”பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். ”இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?ங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்” என்றார்.

**தியானம்:** ஒருவரை நான் அன்பு செய்வதனால் எனக்கு என்ன இலாபம். இன்னொருவருக்கு நான் உதவி செய்வதால் எனக்கு அவரிடமிருந்து என்ன உதவி கிடைக்கும். இவ்வாறு கைமாறுகளுடனும், பணம், பதவி, புகழ் போன்ற எதிர்பார்ப்புகளுடனுமே இன்றைய உலகம் ‘அன்பு’ என்ற அரும் பதத்தைப் பயன்படுத்தி வருவதை நாம் பரவலாகப் பார்க்கின்றோம். உண்மை ‘அன்பு’ கள்ளம் கபடமற்றது, தன்னலமற்றது, பொறாமை கொள்ளாதது, எதிர்பார்ப்புகள் அற்றது என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், யார் யாரை அன்புசெய்ய வேண்டும் என்பதில் நாம் கூட பல தடவைகளில் தடுமாற்றம் கொள்கின்றோமா? நாம் எவரையெல்லாம் அன்புசெய்ய வேண்டும் என்ற பட்டியலைத் தயாரிப்பதில் மிக கவனம் செலுத்துகின்றோமா? இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அதற்கான அறிவுரைகளைத் தந்து நிற்கின்றன. நாம் செலுத்தும் அன்பை நமக்குத் திருப்பித் தர முடியாதவர்களுக்கும், முக்கியமா நாம் நமது ‘பகைவர்’ பட்டியலில் வைத்திருப்பவர்களுக்குமே முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதே அந்த அறிவுரைகள். இவ்வறிவுரைகள் உலகவியலுக்குச் சற்றுப் புறம்பானதாகத் தென்படுகின்றது அல்லவா? ஆகவேதான் இறைமகன் இயேசு இவற்றை வெறும் வார்த்தைகளால் நமக்குக் கற்பித்துவிட்டுச் செல்லாமல், வாழ்ந்துகாட்டிச் சென்றிருக்கிறார். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என விசுவசிக்கும் நாம், அதே கடவுளின் வல்லமை நம்மை ஆட்கொள்ளும்போது, நம்மால் இயலாது என்று சொல்வதற்கும் ஒன்றுமில்லை என்பதையும் விசுவசித்து, ‘இறையன்பு நிறைவாழ்வை’ எம் வாழ்வாக்குவோம்.